சைவ சமயம் பிரிவு 1

சைவ சமயம் எமது சமயம். சிவபெருமானை முழுமுதற்கடவுளாக வணங்கும் சமயம். அன்பே இதன் ஆதாரம். சிவனே எமது அம்மாவாகவும் அப்பாவாகவும் இருப்பவன். சைவர்களாகிய நாம் எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்த வேண்டும்.
பஞ்சமாபாதகங்களை செய்யாது உண்மைச் சைவராக ,உறுதியோடு வாழவேண்டும் ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதியாக இருப்பவன் சிவன் ,அவனை முதலாக கொண்ட சைவ சமயமும் தொடக்கமும் முடிவும் அற்றது. அநாதியானது.புலம் பெயர்ந்த எமக்குப் புனித வாழ்வு பெற துணையாக நிற்பது எம் ஒப்பற்ற சமயமாம் சைவ சமயமே !
“மேன்மைகொள் சைவநீதி! விளங்குக உலகமெல்லாம்!”
நன்றி! வணக்கம்!